**செய்தி வெளியீடு எண்: 506** **நாள்: 30.07.2018**

## செய்தி வெளியீடு

## தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி விதிகள் மற்றும் கட்டிட விதிகள், 2018

வளர்ச்சி விதிகளும் கட்டிட விதிகளும் ஒரு திட்டமிட்ட நகர் மற்றும் ஊரமைப்பை ஏற்படுத்த உதவுகின்றன. இந்த விதிகள், கட்டிடங்களில் வசிப்பவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்கின்றன. திட்டமிட்ட வளர்ச்சியை உறுதி செய்ய, பல்வேறு விதிகள் தற்போது அமலில் உள்ளன. திட்ட அனுமதியும், கட்டிட அனுமதியும் பெறுவதை எளிதாக்கவும், வெளிப்படைத்தன்மையுடையதாக்குவதற்கும் பல்வேறு விதிகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். எனவே, “தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி விதிகள் மற்றும் கட்டிட விதிகள், 2018” என்ற வரைவு பொது விதி உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது திட்ட அனுமதி பெற தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்டு நடைமுறையில் உள்ள :-

அ) சென்னை பெருநகரப் பகுதிக்கான வளர்ச்சி விதிகள்;

ஆ) தமிழகத்தின் பிற பகுதியில் நடைமுறையிலுள்ள வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகள்; மற்றும்

இ) கட்டிட அனுமதி பெற, உள்ளாட்சி சட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்டு நடைமுறையிலுள்ள கட்டிட விதிகள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

**2.** இந்த புதிய விதிகள் தமிழகம் முழுவதற்கும் பொருந்தும். இந்த விதிகளில் திட்ட அனுமதியும், கட்டிட அனுமதியும் பெருவதற்கான வழிமுறைகள், பணி நிறைவுச் சான்றிதழ் பெறும் முறைகள் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. வாங்கும் விலையில் வீடுகள் கட்டுவதை ஊக்குவிக்க தனி விதிமுறைகள் சேர்க்கப்பட்டுள்ளது. வயதானவர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் குழந்தைகளுக்கு உதவும் வகையில் தங்குதடையற்ற கட்டிட அமைப்பை உருவாக்க சிறப்பு விதிகள் சேர்க்கப்பட்டுள்ளது.

**3.** இந்த விதிகளை இறுதி செய்து நடைமுறைப்படுத்துவதற்குமுன், அரசு, பொது மக்களின் கருத்துக்களை கேட்க முடிவு செய்தது. அதன்படி, இந்த வரைவு விதிகள்,

அ) சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

ஆ) நகர் மற்றும் ஊரமைப்புத் துறை இயக்குநரகம்

இ) பெருநகர சென்னை மாநகராட்சி

ஈ) நகராட்சி நிர்வாக இயக்குநரகம்

உ) பேரூராட்சிகளின் இயக்குநரகம் மற்றும்

ஊ) ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநரகம்

ஆகிய துறைகளின் கீழ்க்காணும் இணைய தளங்களில் வெளியிடப்பட்டுள்ள வரைவு **தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி விதிகள் மற்றும் கட்டிட விதிகள், 2018**-ஐ பார்வையிடலாம் / பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்:-

http://www.cmdachennai.gov.in/pdfs/TNCDRBR-2018.pdf

http://www.tn.gov.in/tcp/pdf/draft_tn_common_promotion_rules_2018.pdf

http://www.chennaicorporation.gov.in

http://cma.tn.gov.in/cma/en-in/Pages/Whats-New.aspx

and in all websites of 11 Corporations and 124 Municipalities

http://www.tn.gov.in/dtp/

https://www.tnrd.gov.in/pdf/draft_tn_common_promotion_rules_2018.pdf

**4.** பொதுமக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரும் இந்த வரைவு விதிகளின் பேரில் தங்களுடைய கருத்துக்களை **20.08.2018**-க்கு முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

**சு. மாதேவன் பிள்ளை**
அரசு துணைச் செயலாளர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**